1971 ஜூன் 29]

கள் அந்த மருத்துவ மனைக்கு வருவதால், ஒரு மருத்துவரால் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. இன்னும் அதிகமான மருத்துவரை இந்த பிரைமரி ஹெல்த் சென்டரில் நியமிக்கிற உத் தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே. இந்தக் கேள்வி தனிக் கேள்வியாக இருந்தாலும், ஆரம்பச் சுகாதார நிலை யத்தில் ஏற்கெனவே ஒரு டாக்டர் கூட இல்லாத நேரத்தில், இப் போது ஒரு டாக்டராவது இருக்கிறார் என்று கருதி திருப்தி அடைய வேண்டும். இன்னும் கொஞ்சம் காலம் கழித்துத்தான் இரண்டாவது டாக்டரைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்.

Discharged Prisoners' Society

* 81 Q. THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any grant is given to the Tamil Nadu State Discharged Prisoners' Society by the Government; and

(*b*) if so the details thereof for the years 1969–70–71?

THE HON THIRU S. MADHAVAN:

(*a*) Yes.

(*b*) 1969-70 Rs. 12,000 (in two instalments.)

1970–71 Rs. 12,000 (in two instalments.)

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், இப்போது அவர்களுக்கு அளிக்கும் கிராண்ட் தொகையை இன்னும் கூடுதலாகக் கொடுக்க வும், இந்த மாதிரி சொசைடி இல்லாத இடங்களில் கூடுதல் சொசைடி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலம் முழுவதும் உள்ள சங்கம் இது. இன்னும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

சிறைக் கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி

* 82 **திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறைக் கைதிகளுக்குக் கட்டாய கல்வி அளிக் கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, ஜெயிலில் உள்ளவர் களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல அறிவு வளருமே. ஆகவே, அவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.